செய்தி வெளியீடு எண் : 32 நாள் :18.04.2018

***தேனி மாவட்டம்,***
***மங்கலதேவி கண்ணகி கோவில் மற்றும் அருள்மிகு கௌமாரியம்மன் கோவில் திருவிழாக்களை முன்னிட்டு***
***உள்ளூர் விடுமுறை வழங்கிட உத்தரவிடப்பட்டுள்ளது***
***மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தகவல் :***

*****

சித்திரை மாதம் பௌர்ணமி தினத்தன்று தமிழகம் மற்றும் கேரளம் பகுதியில் அமைந்துள்ள வரலாற்று சிறப்புமிக்க மங்கலதேவி கண்ணகி கோயில் திருவிழா ஒவ்வொரு ஆண்டும் சிறப்பாக தமிழகம் மற்றும் கேரளம் பக்தர்களால் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. அதனடிப்படையில், எதிர்வரும் 30.04.2018 திங்கள் கிழமை அன்று நடைபெறும் பாரம்பரிய வரலாற்று சிறப்புமிக்க மங்கலதேவி கண்ணகி கோயில் திருவிழா அன்று தேனி மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை அளித்திட உத்தரவிடப்பட்டுள்ளது. இவ்விடுமுறையினை ஈடுசெய்யும் வகையில் எதிர்வரும் 19.05.2018 சனிக்கிழமை அன்று பணி பணி நாளாக செயல்படும்.

அதனைப்போன்று, வீரபாண்டி அருள்மிகு கௌமாரியம்மன் திருக்கோவில் திருவிழா 08.05.2018 முதல் 15.05.2018 வரை கொண்டாடப்படவுள்ளது. இவ்விழாவில் முக்கிய நிகழ்ச்சியான தேரோட்டம் 11.05.2018 (வெள்ளிக்கிழமை) அன்று நடைபெறுவதால் தேனி மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமறை அளித்திடவும் உத்தரவிடப்பட்டுள்ளது. இவ்விடுமுறையினை ஈடுசெய்யும் வகையில் எதிர்வரும் 02.06.2018 சனிக்கிழமை அன்று பணி நாளாக செயல்படும்.

மேலும், உள்ளூர் விடுமறை தினங்களில் மாநில அரசு அலுவலகங்களுக்கும் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கும் பள்ளிகள், கல்லூரிகளில் நடைபெறும் தேர்வுகள் மற்றும் இதர முக்கிய தேர்வுகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் உள்ளூர் விடுமுறைகள் வழங்கப்பட்டுள்ளது. அவசர அலுவல்களை கவனிக்கும் பொருட்டு மாவட்டத்திலுள்ள கருவூலம், சார்நிலை கருவூலங்களும் குறிப்பிட்ட பணியாளர்களோடு செயல்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தேனி.**